BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

சங்ககாலப் போர் அறங்களில் அடையாளப் பூக்கள்

ச. சுந்தரேசன்
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை -606603.
மெயில்- sundhar.sks@mail.com, செல்- 8680844821

நெறியாளர்
முனைவர் மு. பாலமுருகன்
இணைப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை- 606603.

ஆய்வுச் சுருக்கம்

உலக மொழிகளில் தொன்மையும் வண்மையும் நிறைந்த மொழி தமிழ்மொழியாகும். உலகில் முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்மொழியாக இருக்கும் என்ற கோணத்தில் இன்று ஆய்வுகள் வெளிவரத் துவங்கியுள்ளன. அத்தகு மொழியினைப் பேசிய மக்களின் வாழ்வியல் முறைகளும் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவே இருக்க முடியும், அந்த வகையில் தமிழிலக்கியங்கள் பெரும்பாலும் அகம், புறம் (காதலும், வீரமும்) என்ற நிலையிலே காணக்கிடைக்கின்றன. உலகின் பல்வேறு மொழிகளில் போர்குறித்த செய்திகள் வரலாறாகப் பதிவிடப்பட்டுள்ளன. தமிழ்மொழியும் பல்வேறு போர்கள் குறித்த வரலாற்றினைத் தாங்கி நிற்கின்றது. மேலும் போர்கள் நடைபெறும் நிலைகளை இலக்கணப்படுத்திய முதல் மொழியாகத் தமிழ்மொழியே திகழ்கிறது. இலக்கண இலக்கியங்கள் எடுத்தியம்பும் போர் மரபுகளின்படி பழந்தமிழர்கள் போர்க்களங்களுக்குச் செல்லும் போது அடையாளப் பூக்களைச் சூடிச்சென்றுள்ளனர். அவ்வாறு போர்மறவர்கள் சூடிச்சென்ற பூக்கள் அவர்களுக்கு உயிர்காக்கும் மருந்தாகப் பயன்பட்டுவந்துள்ளது என்பதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள்

புறத்திணைகள், அடையாளப் பூக்கள், முதலுதவி, தெரியல், மறவர்கள்.

முன்னுரை

சிறப்பு மிகு தமிழ்மொழியில் மூன்று அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டடு இயற்றப்பட்ட தொன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம். பழந்தமிழர்கள் பொருளுள்ள வாழ்க்கையை வாழ்ந்ததற்கான சான்றாக அமைவது தொலகாப்பியப் பொருளதிகாரம் ஆகும். அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல். மரபியல் என ஒன்பது இயல்களைக் கொண்டுள்ள பொருளதிகாரத்தில் இரண்டாவதாக அமைந்துள்ள புறத்திணையியல், பண்டையகாலப் போர் மரபுகளையும் போர் நிகழ்த்துவதற்கான இலக்கணங்களையும் எடுத்தியம்புகின்றது. தொல்காப்பியம் ஏழு திணைகளாகக் கூறிய புறத்திணைகளைப் பின்னர் தோன்றிய புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரண்டாகப் பகுத்துக் கூறுகின்றது.

திணை என்னும் சொல்லுக்கு வாழ்வியல், ஒழுக்கம் என்று விளக்கம் பகர்கின்றன அகராதிகள். அந்த வகையில் போர்க்களங்களிலும் போர் உத்திகளைக் கையாளும் போதும் என்னென்ன? ஒழுக்கங்களைப் பழந்தமிழர்கள் மேற்கொண்டு வந்தனர் என்பதைப் படம்பிடித்துக்காட்டும் கண்ணாடியாக விளங்கின்றன புறத்திணை நூல்கள். அவற்றுள் போருக்குச் செல்லும் மறவர்கள் தங்களின் முடிமேல் அடையாளப் பூ++வாக சில பூ+க்களைச் சூடி போருக்குச் செல்கின்றனர். அவ்வாறு அவர்கள் சூடிச்செல்லும் பூ+க்களுக்கும் போர்க்களத்திற்கும் போரின் வெற்றித் தோல்வி ஆகியவற்றிற்கும் இடையே உள்ள தொடர்பினை ஆராய முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புறத்திணைகளும் – அடையாளப் ப+க்களும்

தொல்காப்பியர் கூறிச்செல்கின்ற புறத்திணைகள் ஏழு அவை முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகியவையாகும். அதனைத் தொடர்ந்து பின்னர் ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை 1.வெட்சி, 2.கரந்தை, 3.வஞ்சி, 4.காஞ்சி, 5. நொச்சி, 6.உழிஞை, 7.தும்பை, 8.வாகை, 9.பாடாண், 10. பொதுவியல், 11. கைக்கிளை, 12.பெருந்திணை என பன்னிரண்டுத் திணைகளாகப் பகுத்துக் கூறுகின்றது. மேற்கண்ட இருபெரும் இலக்கண நூல்களிலும் பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய நான்கு திணைகள் தவிர மீதம் உள்ள எட்டு திணைகளின் பெயர்களும் போர் மறவர்கள் சூடிக்கொள்ளும் பூக்களின் பெயராலேயே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வெட்சித்திணைக்கு இலக்கணம் சொல்லும் தொல்காப்பியர்

"வெட்சி தானே குறிஞ்சியது புறனே" (தொல்.புற-நூ.எ.59)

எனக் கூறுகின்றார். இந்நூற்பாவிற்கு உரைமேற்கொண்ட இளம்G+ரணார், "வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயது எவ்வாறெனின் நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் அதற்கு அது புறனாயிற்று என்க. சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்" (தொல்.பொரு.ப.73) என்று உரை செய்கின்றார். குறிஞ்சி என்னும் அகத்திணையின் புறமாக அமைவது வெட்சி என்னும் புறத்திணையாகும். ஆதலால் குறிஞ்சி நிலத்தில் பூக்கும் வெட்சிப் பூ+வினை ஆநிரைகளைக் கவரும் மறவர்கள் சூடிக்கொள்கின்றனர். எனவே அத்திணைக்கு அந்தப் பூவின் பெயரே ஆகிவந்துள்ளது என்பது இளம்G+ரணரின் விளக்கமாகின்றது. இவ்வாறே ஒவ்வொருத்திணையின் பெயரும் போர் வீரர்கள் சூடும் பூவின் பெயராலேயே அமைகின்றது கண்கூடான ஒன்றாகும். இளம்G+ரணரின் கூற்றுப்படி குறிஞ்சி நிலத்தில் வெட்சிப்பூ பூக்குமாயின் அகப்பொருள் விளக்கம் குறிப்பிடுகின்ற கருப்பொருளின் பட்டியலில் வெட்சிப்பூ குறிஞ்சி நிலத்தில் அமையப்பெறவில்லை?.

தொல்காப்பியர் கூற்றுப்படி அகப்-புறப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் எந்த அகத்திணை நிலத்திற்குரிய பூவும் புறத்திணையில் அமையவில்லை. வஞ்சி மரம் மருத நிலத்திற்குரியது ஆனால் வஞ்சித்திணை – முல்லைத்திணைக்குப் புறனாக அமைகிறது. அவ்வாறே உழிஞை மரம் பாலை நிலத்திற்குரியது ஆனால் நெய்தலுக்குப் புறனாக அமைகின்றது. ஏன்? போர் வீரர்கள் சூடுகின்ற பூக்கள் மாறுபடுகின்றன, தனது நிலத்திற்குரிய பூக்களைச் சூடாமல் பிறப்பூக்களைச் சூடுவதற்குக் காரணம் என்ன? இவ்வாறு வெவ்வேறு பூக்களைச் சூடிக்கொண்டு போர்களத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் என்ன? போன்ற வினாக்களுக்கு விடைத்தேடவேண்டியது அவசியமாகின்றது.

போர்க்களமும் - தமிழர்களின் நுண்ணறிவும்.

மேற்கண்ட வினாக்களுக்கு விடைவேண்டி ஆராய முனைந்தால்,

"எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்" (தொல்.பொரு. நூ.எ.965)

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் நமக்கு விடைத்தர தலைப்படுகிறது.

அச்சூத்திரத்தின்படி ஒரு நிலத்திற்குரிய பூவும் புள்ளும் எந்த நிலத்தில் காணக்கிடைக்கின்றதோ! அந்த நிலத்தின் கருப்பொருளாக எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெளியமுடிகின்றது.

ஆனாலும், தமிழ் நிலத்தை ஆண்ட முப்பெரும் வேந்தர்களுக்கும் உரிய பூக்களாக முறையே சேரனுக்கு – பனம் பூவும், சோழனுக்கு – ஆத்தி பூவு , பாண்டியனுக்கு – வேம்பும் அமைகின்றன. இம்முப்பெரும் வேந்தர்களும் பகையரசர்களை எதிர்த்துப் போரிடச் செல்கின்ற பொழுது புறத்திணைக்குரிய பூக்களையே சூடிச்சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் பழந்தமிழர்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்திருக்கலாம், அவ்வினக்குழுவின் அடையாளமாக அவர்கள் பூக்களைச் சூடிப் போர்செய்திருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.

வேறு எந்த மொழியும் தமிழ்மொழிப் போன்று மக்களின் வாழ்வியலை இலக்கணப்படுத்தவில்லை. தமிழ் மொழிக்கு நிகரானதொரு மொழி வேறு எதுவும் இல்லை!. அத்தகு சிறப்பினைத் தாங்கிய மொழியின் இலக்கணம் பிழையாகுமோ?

தற்காலத்தில் கோவில் வழிபாடுகள், திருவிழா கூட்டம், அரசியல் கூட்டம், விளையாட்டுப் போட்டி என பொதுவில் மக்கள் கூடுகின்ற எந்த இடமாக இருந்தாலும் பாதுகாப்பு அம்சத்தில் காவல்துறைக்கு அடுத்தபடியாக முக்கிய இடம் வகிப்பது முதலுதவி (First Aid) கூடங்களும் மருத்துவக்குழுக்களும் ஆகும். மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும் கூட்டங்களுக்கே மருந்துகளும், மருத்துவக் குழுக்களும் அவசியமாகிறது என்றால் போர்க்களம் என்பது கை, கால் வெட்டப்பட்டும் தலைகள் துண்டிக்கப்பட்டும் குருதிப் பெருக்கொடுத்து ஓடும் ரணம் நிறைந்த இடமாகும்.

ஒவ்வொரு நாள் இறுதியிலும் இருபெரு படைகளிலும் ஆயிரக்கணக்கான வீரர்கள் இறந்துபடுவர். பல்லாயிரக்கணக்கான வீரர்கள் உடல் உறுப்புகள் வெட்டப்பட்டு குருதி வடிய விழுப்புண் அடைவர். அத்தகு சூழலில் காயப்பட்ட வீரர்களுக்கு மருந்திடுவது அவசியமாகிறது. அவ்வாறு மருந்திடுவது என்பது அடுத்த நாள் போருக்குத் தனது படையின் வலிமையைக் கூட்டுவதாகும். போர்க்களங்கள் என்பது பெரும்பாலும் ஊரின் புறத்தே அமைகின்றன. அத்தகு இடத்தில் மருத்துவப் பொருட்கள் கிடைப்பது அரிதான ஒன்றாகும்.

பண்டைத் தமிழர்களின் வைத்தியமுறை என்பது இயற்கை முறை வைத்தியங்களாகும். குறிப்பாக மூலிகைகளின் (தாவரங்களின்) வேர், பட்டை, தழை, பூ, விதை ஆகியவற்றைப் பயன்படுத்தி நோய்களைக் குணப்படுத்துவதாகும். அந்த வகையில் ஒவ்வொரு திணையிலும் போர் மறவர்கள் சூடுகின்ற பூவும், தழையும் ஒவ்வொரு மருத்துவ குணம் கொண்ட மூலிகை மருந்தாக அமைவதை முன்னோர்களின் மருத்துவக் குறிப்பின் மூலமாக அறியமுடிகின்றது. ஆக காரணமின்றி போர்மறவர்கள் தங்களின் முடிகளில் திணைப் பூக்களைச் சூடிப் போரிடவில்லை என்பது புலனாகிறன்றது. மேலும் போர்க்காயங்கள் மற்றும் உடல் உபாதைகளுக்குத் தேவையான மருத்துவ மூலிகைகளைத் தங்களின் தலையிலேயே சூடிச் சென்ற மருத்துவ அறிவும் போர் மேலாண்மைச் சிந்தனையும் வியப்பிற்குரியதாகும்.

திணைப்பூக்களும் – மருத்துவ குணங்களும்

போர்மரபுகளை எடுத்தியம்பும் புற இலக்கண நூல்களின் கூற்றுப்படி ஒவ்வொரு புறத்திணைக்குரிய பூவும் வேறுபட்ட மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளது. அவை பல்வேறு நோய்களைத் தீர்த்து உடல் நலத்தைக் காக்கும் உன்னத மருந்தாகத் திகழ்ந்திருக்கின்றது.

வெட்சித் திணையும் – உடல் நலமும்

தொல்காப்பியச் சூத்திரத்தின் படி வெட்சித் திணை என்பது குறிஞ்சித் திணைக்குப் புறனாக அமைகின்றது.

"வேந்து விடுமுனைவர் வேற்றுப்புலக்கிளவின்
ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்" (தொல்.பொரு.நூ.எ.1003)

அரசனின் ஆணைப்படி அயல்நாட்டின் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து கொணர்ந்துப் பாதுகாக்கச் செய்ய வேண்டும் என்பது மேற்கண்ட நூற்பாவின் விளக்கமாகும். இதே கருத்தினை,

"வென்றிவேந்தன் பணிப்பவும் பணிப்பு இன்றியும்
சென்று இகல்முனை ஆதந்தன்று" (பு.வெ.மா வெ. படலம் ப.எண்-11)

என்று புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது.

ஆநிரைகளைக் கவரச்செல்லும் வீரர்கள் வெட்சிப்பூவைச் சூடிச் செல்வதால் இது வெட்சித்திணை எனப்பட்டது. பசுக்கூட்டங்களைக் கவர்ந்து செல்லும் வீரர்கள் நீண்ட தூரம் பயணப்படுவதால் உடல் சோர்வு ஏற்படும். மேலும் பசுக்கூட்டங்களை மீட்க வரும் கரந்தை வீரர்களுடன் போரிடுவதால் உடல் முழுவதும் காயங்கள் ஏற்படும். அப்படி ஏற்பட்ட காயங்களும் சோர்வுக்கும் வெட்சிப் பூவும் அதன் இலைகளும் மருந்தாக அமைகின்றது.

வெட்சிப் பூவின் மருத்துவ பயன்கள்

வெட்சிப் பூ உடல் சோர்வினைப் போக்கும், மேலும் காய்ச்சலைக் குணப்படுத்தக் கூடியது. வெட்சி இலைகளை அரைத்துப் பற்றாகப் போடும் போது தோல் நோய்கள் குணமாகும். உடலில் உள்ள கொப்பளங்கள் மற்றும் தடிப்புகளைச் சரி செய்கிறது.

குறிப்பாக அடிப்பட்ட இடத்தில் தசை நசுங்கி. ரத்த நாளங்கள் சீர்கெட்டுப் போகும் போது வெட்சியின் இலைகளை பற்றாகப் போட்டால் புண்கள் ஆறிப்போகும், இரத்த நாளங்கள் சீரடையும். "வெட்சியின் பூ, இலைகளை பசைபோன்று அரைத்து அடிபட்டு வீக்கம் உள்ள பகுதியில் பற்றாகப் போட்டால் வீக்கம் வற்றிப்போகும். மூட்டு வலி மறையும் தசை சிதைவு, நரம்புச் சிதைவு இரத்த நாளங்களில் ஏற்படும் சிதைவு ஆகியவற்றைச் சரி செய்யும் அற்புத மருந்தாக வெட்சி விளங்குகிறது என்று இயற்கை வாழ்வியல் ஆலோசகர் கோவை பாலா தனது மருத்துவ குறிப்புகளில் பதிவு செய்தள்ளார்.

போர்க்களத்தில் ஏற்படுகின்ற உடல் சோர்வு, காயங்கள், தசை சிதைவு, நரம்புச் சிதைவு, இரத்த நாளங்கள் சிதைவு இவற்றால் ஏற்படும் காய்ச்சல் ஆகிய நோய்களுக்கும் வெட்சி மருந்தாக விளங்குவதை அறிந்து வெட்சிப் பூவினைத் திணைப் பூவாகச் சூடிச்சென்ற நம்முன்னோர்களின் அறிவு வியப்பிற்குரியதாகும்.

வஞ்சித் திணையும் உடல்நலமும்

பகைவர்களின் நாட்டைக் கைப்பற்றக் கருதிப் படை எடுத்துச் செல்வது வஞ்சித் திணையாகும்.

பகை நாட்டைக் கைப்பற்றக் கருதிச்செல்லும் வீரர்கள் வஞ்சிப் பூவினைச் சூடிச்செல்வர். இக்கருத்தினை,

"வாடா வஞ்சி தலை மலைந்து

கூடார் மண் கொளல் குறித்தன்று" (பு.வெ.மா வ. படலம் ப.எண்-51)

எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது.

வஞ்சிப் பூவின் மருத்துவ பயன்களும்.

வஞ்சி என்பது ஒரு கொடி வகையாகும். வழக்கத்தில் இத்தாவரத்தை சீந்தில் கொடி(அமிர்த சஞ்சீவினி) என்பார்கள். இதன் இலை, கொடி, வேர் ஆகியவை மருத்துவ குணம் கொண்டவையாகும். அடிமுறையில் முச்சை ஆனவர்களின் காது மூக்கு ஆகிய துவாரங்களில் சீந்தில் கொடியின் சாற்றினை விடுவதன் மூலம் அவர் மீண்டும் உயிர்தெழுவார் என இயற்கை மற்றும் வர்ம மருத்துவர் திரு. மணிவண்ணன் கூறுகின்றார். வஞ்சிப் பூ மற்றும் இலை மூட்டுவலி,

வலிப்பு நோய் சிறுநீரகக் கோளாறுகள் உடலில் ஏற்படும் வீக்கம் போன்றவற்றைக் குணப்படுத்தும். மேலும் இக்கொடிக்கு "சாகாமூலி என பெயர் உண்டென்றும் இராமாயணப் போரில் லட்சுமணன் உட்பட்ட வானரப்படைகள் இறந்து பட்ட போது மாண்ட அனைவரையும் உயிர் பெறச் செய்தது இம்மருந்தே எனவும், அதனால் இதனை சாகாமூலி என சித்தர்கள் அழைப்பதாகவும்" எழுத்தாளர் பா.இராதாகிருஷ்ணன் பதிவிடுகின்றார்.

காஞ்சித் திணையும் உடல்நலமும்

தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த வஞ்சி வேந்தனையும் அவனது படைகளையும் காஞ்சி பூச்சூடி எதிர்கொண்டு தன் நாட்டைக் காப்பது காஞ்சித்திணையாகும். காஞ்சி மரங்கள் செம்மருதம், ஆற்று பூவரசு, பூவரசு ஆற்றரசு என 14 வகையான பெயர்களில் சுட்டப்பெறுகின்றன.

காஞ்சியின் மருத்துவப் பயன்கள்

காஞ்சி மரத்தின் தோலை (மரப்பட்டை) நீரிலிட்டுக் காய்ச்சிக் குடித்தால் பித்தம், வயிற்று உப்புசம், உடல் வீக்கம் இரப்பை வலி, குடல்வலி ஆகிய நோய்கள் நீங்கும். பொதுவில் வயிறு மற்றும் உள்ளுறுப்புகள் சார்ந்த நோய்களைக் குணப்படுத்துகின்றது.

நொச்சித்திணையும் உடல்நலமும்.

பகைவர்கள் மதிலைச் சூழ்ந்து முற்றுகையிடும் போது மதிலுக்குரிய அரசன் நொச்சிப் பூவைச் சூடி மதிலைக் காத்து நிற்பது நொச்சித் திணையாகும். இதனை,

"ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணம்
காப்போர் சூடிய G+ப்புகழ்ந் தன்று" (பு.வெ.மா.நொச்சிப்படலம் ப.எண்-107)

என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறுகின்றது.

நொச்சியின் நோய்த்தீர்க்கும் குணங்கள்

மருத்துவ குணங்களின் அடிப்படையில் நொச்சி கபம் எனச் சொல்லப்படும் சளி போன்ற நோய்களுக்கு மருந்தாக விளங்குவதை நாம் அனைவரும் அறிவோம். அது மட்டும்மல்லாமல் பல நோய்களுக்கு நொச்சி பூவும் இலைகளும் மருந்தாகப் பயன்படுகின்றன.

ஒரு தேக்கரண்டி நொச்சியிலை சாற்றில் 1கிராம் மிளகுத் தூள், நெய் சேர்த்து உண்டால் மூட்டுவலி, இடுப்பு வலி, வீக்கம் ஆகியவை குணமாகும். நொச்சி இலைகளைத் தலையணைப்போன்று தலையின் கீழ் வைத்து உறங்கினால் காய்ச்சல், தலைவலி, ஆட்டிசம் அகியவை குணமாகும். கருநொச்சி இலைகளை அரைத்துப் பற்றாகப் போடும் போது கால் வீக்கம் குறையும். நொச்சி சாற்றைக் கொண்டு புண்களைக் கழுவினால் காயத்தில் நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்கும். இது இன்றயை டிஞ்சர் என்னும் மருந்தோடு ஒப்புநோக்கத்தக்கது. நொச்சி இலையை வதக்கி ஒற்றடமிட்டால் வீக்கம் குணமாகிறது. நொச்சி இலைகளை நீரில் இட்டு காய்ச்சி வடிகட்டி அந்த நீரில் குளித்தால் உடல் வலிகள் குறையும். நொச்சி பூவும் இலையும் சிறந்த வலி நிவாரணியாகப் பயன்படுகிறது என மருத்துவக் குறிப்புகள் எடுத்தியம்புகின்றன.

உழிஞைத்திணையும் உடல் நலமும்

உழிஞைத் திணை என்பது பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று மதில்சுவரை வளைத்துப் போரிடுவது ஆகும். இவ்வாறு போரிடும் வீரர்கள் உழிஞை மாலையைச் சூடிச்செல்வர். இக்கருத்தினை,

"பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டின்
குருதி வேட்கை உருகெழு முரசம்" (புறம் – 50-4-5)
" சிறியிலை உழிஞை தெரியல் சூடி" (பதி -63-8)

என்று பதிற்றுப்பத்து பாடலடியும் பறைசாற்றுகின்றன.

இச்செடியைத் தற்காலத்தில் கொற்றான் என்றும் முடக்கொற்றான் என்றும் நாட்டுபுற வழக்கத்தில் அழைக்கின்றனர். கை,கால்,மூட்டு வலி, வாதநோய்க்கு மருந்தாக அமைவதால் அது முடக்கொற்றான் என பெயர்பெற்றுள்ளது.

உழிஞையின் மருத்துவப் பயன்கள்

உழிஞை ஒரு மிகச்சிறந்த வலிநிவாரணியாகத் திகழ்கின்றது. எண்ணெயில் இதன் இலைகளையிட்டு காய்ச்சி அடிபட்ட இடங்களில் தேய்த்தால் வலி குறையும்.

தும்பைத்திணையும் உடல் நலமும்

இருபெரும் வேந்தர்களும் அவர்களின் படைகளும் களம் அதிரும்படி போர் புரிவது தும்பைத் திணையாகும். இப்போரில் இரண்டு படையின் வீரர்களும் தும்பைப்பூச்சூடி அதிரப் பொருவது தும்பைத்திணை என்று இலக்கணநூல்கள் சான்று பகர்கின்றன. போர்க்களத்தில் வெற்றித் தோல்வியை முடிவு செய்வது இந்த போராகும். எனவே கடுமையான போரினால் ஏற்படும் காயங்களுக்கும், நோய்களுக்கும் தும்பை சிறந்த மருந்தாகச் செயல்படுகின்றது.

தும்பையின் மருத்துவப் பயன்கள்

பொதுவாகத் தும்பை உடல் உஷ்ணத்தைக் குறைக்கும், தலைபாரத்தைக் குறைக்கும். கடுமையான தலைவலி குணமாக தும்பை பூவின் சாற்றை மூக்கில் விட்டால் தலைவலி குணமாகும்.

அதிகத் தாகம், நாவறட்சி ஏற்பட்டால் தும்பைப் பூவைத் தண்ணீரில் கொதிக்க வைத்து தேன்கலந்து உண்டால் நாவறட்சி நீங்கும். கடுமையாகப் போர் புரியும் காலங்களில் வீரர்களுக்கு ஏற்படும் நாவறட்சிக்குத் தும்பைப் பூ பானம் பயன்பட்டிருக்கலாம்.

தும்பை பூ மற்றும் இலையை அரைத்து விஷக்கடி ஏற்பட்ட இடத்தில் பூசி உள்ளுக்கும் வழங்கி வந்தால் விஷமுறிவு ஏற்படும். மீனிசம் ஏற்பட்டு மூக்கில் இரத்தம் வடிந்தால் தும்பை பூ மற்றும் இலை சம அளவு எடுத்து கசக்கி சாறு எடுத்து மூக்கின் உள்ளே இரண்டு சொட்டு விட்டு வந்தால் பலன் கிடைக்கும். "உடலில் ஏற்படும் வீக்கம் குறைய தும்பை, குப்பை மேனி மற்றும் அவுரி ஆகியவற்றை அரைத்துப் பூசிட வீக்கம் குறையும்" (வைத்தய முறைகள் ப. எண்- 114) என்று வைத்தியமுறைகள் கூறுகின்றது. போர் வீரர்கள் தங்களின் உடலில் ஏற்படும் வீக்கங்களைக் குறைக்கத் தும்பைச்செடியைப் பயன்படுத்தி வந்திருக்கலாம்.

வாகைத்திணையும் உடல் நலமும்

வாகைத் திணை என்பது போரில் வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுதலைக் குறிக்கும்.

"இலை புனை வாகைசூடி இகல் மலைந்து
அகல் கடல் தானை அரசு அட்டு ஆர்த்தன்று" (பு.வெ.மா வாகைப் படலம் ப.எண-185)

வெற்றி வீரர்கள் சூடுகின்ற வாகைப் பூவில் இயற்கையில் பல மருத்துவக் குணங்கள் உள்ளதாக இயற்கை மருத்துவர்கள் கூறுகின்றனர். "சித்த மருத்துவத்தில் சிறுபஞ்சமூலம், பெருபஞ்சமூலம் என்ற இருவகை மருத்துவத் தொகுப்பு உள்ளது. அதில் பெருபஞ்சமூலத்தின் மூலிகையில் வாகையும் ஒன்றாகும்".

வாகையின் மருத்துவப் பயன்கள்.

மூட்டுவலி மற்றும் வீக்கம் குணமாக வாகை இலைகளை விளக்கெண்ணையில் வதக்கி இளம் சூட்டில் வைத்துக் கட்டினால் வலி குறையும். வாகை பூ மற்றும் மொட்டுக்களைச் சம அளவு எடுத்து எண்ணெயில் காய்ச்சி தடவினால் கை, கால் வலி ஆகியவற்றிக்கு மருந்தாகப் பயன்படும்.

வாகைப் பூக்களைக் கசாயம் செய்து தேன் கலந்து குடித்து வந்தால் நுரையீரல் தொற்று சரியாகும். மேலும் வாகை மரத்தின் பட்டையைப் பொடியாக்கி காயத்தில் வைத்துக் கட்டினால் புண் விரைவில் குணமாகும். இவ்வாறு வாகையின் பூ முதல் அனைத்து பாகங்களும் மருத்துவ குணங்கள் நிறைந்தது. வாகை என்பது வெற்றியைக் கொண்டாடுவதோடு மட்டும் அல்லாமல் பல நோய்களுக்கும் மருந்தாகிறது.

முடிவுரை

போர் என்பது பகைநாட்டின் மீது படையெடுத்து நாட்டைக் கைப்பற்றிச் செல்வங்களைக் கொள்ளையடிப்பது மட்டுமல்லாமல் அறத்துடன் கூடிய போர் மரபுகளைப் பின்பற்றி வந்துள்ளதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. ஓர் அரசனுடையக் கடமையாவது நாட்டு மக்களைப் பாதுகாப்பதாகும். அவ்வாறே போர் மறவர்களைக் காப்பதும் அரசனின் கடமையாகவும் அமைகின்றது. பெரும்பாலும் போர்கள் பகல்பொழுதில் மட்டுமே நடைபெற்று வந்துள்ளன என்பதை "வம்ப மள்ளரோ பலரே எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே" என புறநானூற்றுப் பாடல் எடுத்தியம்புகின்றது. பகல்பொழுது முழுவதும் போர்புரிந்த வீரர்கள் இரவு முழுவதும் ஓய்வு மேற்கொண்டு களத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்திட்டு வந்துள்ளனர். அவ்வாறு மருத்துவத்திற்குப் பயன்படும் வகையில் மறவர்கள் தங்களது அடையாளப் பூக்களைச் சூடிச் சென்றுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது. மேலும் போர்க்களங்களில் ஏற்படும் விழுப்புண், வெட்டுக்காயங்கள், கை கால் வலி, வீக்கம், சுவாசக் கோளாறுகள், ரத்தக்கட்டு, தசைச்சிதைவு, நரம்புச்சிதைவு, நாவறட்சி, நரம்பு வீக்கம், இரத்தம் வடிதல் மற்றும் உடல் சோர்வு போன்ற நோய்களுக்கு மருந்தாகப் பயன்படும் வகையில் தங்களின் அடையாளப் பூக்களைச் சூடி போர் செய்துள்ளனர். சங்கத்தமிழர்களின் போர் அறம் என்பது உயிர் காக்கும் மருத்துவ அறிவுடன் நுட்பமாக அமைந்திருப்பது போற்றுதலுக்குரியதாகும்

துணைநூற் பட்டியல்

இளம்பூரணார், தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை,

சுப்பிரமணியன், முனைவர்ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம்,சென்னை.

திருச்சிற்றம்பலவார், சு. வைத்தியமுறைகள் (ரணவைத்தியம்), யாழ்ப்பணம், 1938

தினமணி (சிறுவர் மணி), இணைய இதழ், ஆகஸ்ட்3, 2019

பரிமணம், அ.மா. மற்றும் பிறர், புறநானூறு மூலமும் உரையும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை.

முத்துராசன், டாக்டர் கு. புறப்பொருள் வெண்பாமாலை தெளிவுரை, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

மூலிகை வளம்(இணைய இதழ்), டிசம்பர் 26, 2013

கள ஆய்வு தரவுகள்- திரு. சாலை மணிவண்ணன் அவர்கள், இயற்கை (ம) வர்ம மருத்துவர் . தண்டராம்பட்டு.

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.